பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 14 புதன்கிழமை (27-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 122

## தொண்டமானாறு பகுதியில் கிபிர் விமானம் குண்டுவீச்சு

### நால்வர் காயம், வீடுகள் சேதம்

ஸ்ரீலங்கா விமானப் படையினரின் இஸ்ரேல் தயாரிப்பு கிபிர் விமானம் நேற்றுக் காலை தொண்டமானாறு பகுதியில் குடியிருப்புக்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது.

இச்சம்பவத்தின்போது நால்வர் காயமடைந்தனர் ஒரு வீடு தரைமட்டமானது. இன்னும் சில வீடு; ள் தீப்பிடித்து எரிந்தன.

நேற்றுக் காலை 9.15 மணி அளவில் பேரிரைச்சலுடன், வடமராட்சிப் பகுதியை ஊடறுத்துப் பறந்த கிபிர் விமானம் தொண்டமானாறு பகுதியை வட்டமிட்டு செம்பாடு என்ற இடத்தில் ஒரு வீட்டின் மேல் ஒரு தடவைகளில் இரண்டு குண்டுகளை வீசிப் பறந்து சென்றது.

இச்சம்பவத்தின்போது குண்டு வீச்சு நடைபெற்ற இடத்துக்கு அண்மையில் தோட்டத்தில் வேலை செய்து கொண்டு நின்ற செம்பாட்டைச் சேர்ந்த ஆறுமுகம் துரைராசா (வயது 47) மற்றும் அடுத்தடுத்த வீடுகளில் நின்றவர்களான செல்லர் ஞானசேகரம் (வயது 28), மாணிக்கம் நடராசா (வயது 38), விஜயராசா ரஜனி (வயது 15) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

## சாவகச்சேரி நோக்கி அதிகாலை ஷெல் வீச்சு

சாவகச்சேரி, மார்ச் 27

நேற்று அதிகாலை சுமார் 3.50 மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட இரு ஆட்லறி ஷெல்கள் தென்மராட்சிப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. இவற்றில் ஒரு ஷெல் சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள ஓர் வெற்றுக் காணியில் வீழ்ந்து வெடித்தது. இதனால் அப்பாடசாலையில் இயங்கும் தென்மராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகம், பாடசாலை ஆய்வுகூடம் ஆகியவற்றுடன் கல்வித் திணைக்களத்துக்குச் சொந்தமான ஓட்டோ வாகனம் ஒன்றும் சேதத்துக்குள்ளானது.

கட்டடங்களின் ஓடுகள் தூக்கி வீசப்பட்டும், கண்ணாடிகள் நொருங்கியும் சுவர்கள் சேதமடைந்தும் காணப்பட்டன.

இந்தப் பாடசாலையிலேயே யாழ் கல்வி வலையம் I, யாழ். பிரதம தபால் அலுவலகம் உட்பட இடம்பெயர்ந்த பல பாடசாலைகளும் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

10 யார் தொலைவில் நின்ற காவலாளிகள் இருவர் உட்பட பாடசாலையில் தங்கியுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்தோரும் தெய்வாதீனமாக எவ்வித இழப்புக்களுமின்றி தப்பித்துக் கொண்டனர்.

கற்குழி முதலாம் ஒழுங்கையில் உள்ள ஆலய வளவினுள் வீழ்ந்து வெடித்த மற்றைய ஷெல்லினால் பல பயன்தரு மரங்களும் இரு வீடுகளும் சேதத்துக்கு உள்ளாகின.

(இ-ரி-7-13-15-31-68-117)

# அரச படைகளின் பழிவாங்கலும் தீர்வு முயற்சியின் ஒரு பகுதியா?

## யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் சந்திரிகாவுக்குப் பகிரங்கக் கடிதம்

சாவகச்சேரி, மார்ச் 27

**அப்பாவித் தமிழ் மக்கள் மீதான அரச படைகளின் கோழைத்தனமான பழிவாங்கல் நடவடிக்கைகள் கூட—**

**ஜனாதிபதி சந்திரிகாவின் சமாதானத் தீர்வு முயற்சியின் ஒரு பகுதியா?**

**அதனை அவர் எவ்வாறு நியாயப்படுத்துகிறார்?—**

**என்று கேட்டு, யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் கலாநிதி வண. எஸ். கே. இம்மானுவல் ஜனாதிபதிக்குப் பகிரங்கக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.**

நாச்சிக்குடாவில் விமானப் படையினர் அண்மையில் நடத்திய படுகொலைகள் குறித்து எழுதிய பகிரங்கக் கடிதத்திலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

குரு முதல்வர் தமது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:

ஸ்ரீலங்கா அரச வான்படையின் அட்டூழியத்தால் நாச்சிக்குடாவில் அப்பாவி அகதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

பெரும்பாலும் குழந்தைகளும் வயோதிபர்களுமாக, பதினேழு அப்பாவிக் குடிமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர், அறுபது பேர் படுகாயமடைந்தனர், வீடுகள் பல சேதமாக்கப்பட்டன! சனிக்கிழமை, 1996 மார்ச் மாதம் 16ஆம் திகதி அதிகாலைப் பொழுதில் இக்கோரம் நிகழ்ந்தது. உறக்கத்தில் இருந்த ஒரு கிராமத்தின்மீது ஸ்ரீலங்கா வான்படை திட்டமிட்டு நடத்திய பழிவாங்கல் தாக்குதல்தான் இந்தச் சம்பவம்.

*மூன்றாவது தாக்குதல்*

கடற்புலிகள் சிலர் இக் கரையோரக் கிராமத்தில் இருந்து இயங்குகிறார்கள் என்றொரு உறுதிப்படுத்தப்படாத சந்தேகத்தை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டு, அடைக்கலம் தேடிக் குடியமர்ந்த ஏதிலி அகதிகளைப் பற்றிய கரிசனை சிறிதளவும் கொள்ளாது, உங்கள் ஆயுதப்படையினர் நாச்சிக்குடா மீது சமீபத்தில் சில மாதங்களுக்குள் நடத்திய தாக்குதல்களில் இது மூன்றாவதாகும்.

கிளிநொச்சிக்கு மேற்கே 50 கி.மீ. தொலைவில், பெரிதும் அறியப்படாதிருந்த இந்தக் கிராமம், 1995 ஒக்ரோபர் 30இல் இடம்பெற்ற வரலாற்று நிகழ்வான மக்கள் வெளியேற்றத்தின் ஒரு பகுதியாக பாஷையூர், நாவாந்துறை, நவாலி, மாதகல் போன்ற யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த வறிய மீனவ குடும்பங்கள் இங்கு அடைக்கலம் தேடிய பின்புதான் பெயர் சொல்லித் தெரியவந்தது. சிவனோபாயமாக தமக்குத் தெரிந்த, பரிச்சயமான ஒரே தொழிலென்ற முறையில், மீன்பிடித் தொழிலைச் செய்து சீவிக்க ஏற்ற கரையோரக் கிராமம் என்பதால்தான் ஏதிலிகளான இம்மக்கள் நாச்சிக்குடாவில் அடைக்கல இருப்புத் தேடினர்.

*படுகொலைத் தொடர்கள்*

அப்பாவிக் குடிமக்கள் கொலைசெய்யப்படும் போதெல்லாம், சம்பவம் நடந்து முடிந்த ஒரு சில மணிநேரத்துக்குள்ளேயே அவற்றை ஸ்ரீலங்கா அரச படையினர் 'நியாயப்படுத்தும்' வழமை போன்றே இப் படுகொலையும் நியாயப் படுத்தப்படுமென்பது எங்கள் பட்டறிவின் பாற்பட்ட அனுபவம்; இது ஸ்ரீலங்கா அரச படைகளின் குண அடையாளமென்பது இப்பொழுது நன்கறியப்பட்ட ஒரு விஷயம். கடந்த நாற்பது வருடங்களாக நடந்தேறிய படுகொலைத் தொடர்கள் எல்லாம் இந்த விதத்தில் நியாயப்படுத்தப்பட்டவையே.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வல்வையில் புலிகளின் கடல் தளங்கள் அழிப்பது முக்கிய இலக்குகளில் ஒன்று

### படையினரின் அடுத்த நடவடிக்கை குறித்து வெரித்தாஸ்

தமிழர் தாயகப்பகுதியில் 2 ஆம் கட்ட இராணுவத் தாக்குதலுக்கான ஆயத்தங்களை இலங்கை அரசு தீவிரமாக செய்துவருகிறது. வல்வெட்டித்துறையில் உள்ள விடுதலைப் புலிகளின் வலுவான கடற்படைத் தளங்களை தாக்கி அழிப்பது இராணுவத்தின் முக்கிய இலக்குகளில் ஒன்றாக இருக்கும். மேற்கண்டவாறு வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்து இராணுவ விமானங்கள் மூலம் ஆயிரக்கணக்கான துருப்புக்கள் ஆயுதங்களோடு வட இலங்கையில் குவிக்கப்பட்டுவருகின்றனர்.

ஏப்ரல் இரண்டாம் வாரம் இத்தாக்குதல் தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்கள புத்தாண்டு தினமான ஏப்ரல் 14 ஆம் திகதிக்குள் விடுதலைப் புலிகளை முற்றிலுமாக அழித்து விடுவோம் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த சமீப நாள்களாக சவால் விட்டு வருகிறார் என்றும் வெரித்தாஸ் தெவித்தது.

## யாழ். அரச அதிபர் அலுவலகம்: கொழும்பில் பொலீஸ் சீல் வைப்பு

### இணைப்பதிகாரி தடுத்துவைத்து விசாரணை

கொழும்பு, மார்ச் 27

யாழ். அரச அதிபரின் கொழும்பு உப- அலுவலகம் சீல் வைத்து மூடப்பட்டதாகவும்—

அரச அதிபரின் இணைப்பதிகாரியாக பணியாற்றும் அதிகாரி பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுதாகவும்- கொழும்பு பத்திரிகை செய்தி தெரிவிக்கிறது.

கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமையக கட்டத் தொகுதியில் மேல்மாடியில் அரச அதிபரின் உப - அலுவலகம் செயற்பட்டு வந்தது.

யாழ். மாவட்டத்துக்கான அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப் பொருள்களை கப்பல் மூலம் அனுப்பும் பணிகளை ஒன்றிணைக்கும் செயலை மேற்கொண்டு வந்த இந்த உப- அலுவலகமே பொலீஸாரால் சோதனையிடப்பட்டு "சீல்" வைக்கப்பட்டு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து சென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்று இந்த அலுவலகத்தில் அரச அதிபரின் இணைப்பதிகாரியாக பணியாற்றும் மருதவாணர் என்பவரை அழைத்துச் சென்று தடுத்து வைத்து விசாரிப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டதையடுத்து அலுவலகத்தில் பணிபுரிந்த ஏனைய உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலீஸாரின் இந்த நடவடிக்கையால் யாழ். மாவட்டத்துக்கு அத்தியாவசிய பொருள்கள் அனுப்புவது பாதிக்கப்படும் என்றும்—

இடம்பெயர்ந்த ஒய்வூதியர்களின் கொடுப்பனவும் பாதிக்கப்படும் என்றும் — சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை — யாழ். அரச அதிபர் நேற்று மாலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஊடாக கொழும்புடன் தொடர்புகொண்டு விவரத்தை கேட்டறிந்தார்.

(இ-3-7-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

E.650K Sriram Honda ஜெனரேற்றர், என்பீல்ட் 3 H. P. warer Pump (வில்லியர்ஸ்) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; S. பொன்னுத்துரை, இடைக்குறிச்சி, வரணி. (40381)

அச்சக உபகரணங்கள் விற்பனைக்குண்டு. எம்மிடம் நல்ல நிலையில் உள்ள மெசின், கேசுடன் தமிழ், ஆங்கில எழுத்துக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளல்: ஸ்ரீ ஜெயா அச்சகம், கண்டி வீதி, சாவகச்சேரி. (41102)

## தேவை

தென்னந்தோட்டம், மற்றும் வெறும் நிலம் மூன்று வருட குத்தகைக்கு தர விரும்புபவர்கள் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 57, மே/பா 'உதயன்', நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி. (41114)

## 96/97 எண்சோதிடம்

சண் மாஸ்ரரின் கணிப்பில் எண்சோதிடப் பலாபலன்கள் நூல் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். யாழ். ஆனந்த்ஸ், கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.] [41089

## புவியியல் A/L 1996, 1997

கலாநிதி க. குணராசாவின் புவியியல் நூல்களை 25 சத வீதக் கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம். கமலாம்பிகை நூல் வெளியீட்டகம், 10, மகளிர் கல்லூரி வீதி, கற்குழி, சாவகச்சேரி. (41104)

## விற்பனையாகிறது

1996-97ஆம் ஆண்டுக்கான வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்கள் விற்பனையாகின்றன. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 8, நவீன சந்தை மேல்மாடி (உட்புறம்), சாவகச்சேரி. [41101]

## C. I. M. A. CLASS

C. I. M. A Stage I (London Accountancy) வகுப்புக்கள் 28-3-96 காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. விவரங்களுக்கு: S. நரேஸ் [ஆசிரியர் Northceylon Technical Institute), மொடேர்ன் ரியூட்டரி, தம்பசிட்டி வீதி, 1ஆம் கட்டையடி, பருத்தித்துறை [ரஞ்சன் பூங்காவிற்கு அருகில்]. (40368)

## SAVE THE CHILDREN
### TEMPORARY EMPLOYMENT OPPORTUNITIES

The Save The Children Fund (SCF) is a British International Non-Governmental Organisation (INGO) assisting people in the conflict - affected areas in the North of the country. SCF is particularly concerned about the needs and rights of Children and young people.

SCF needs staff who can be available to stand - in for permanent staff members during periods of leave and sickness and while such employment would be on a strictly temporary basis, more permanent opportunities could be offered at a future date.

An application letter together with a CV should be addressed to the District Co-ordinator, Save The Children, 59 Karthigeyar Lane, Thambasiddy Road, Point Pedro, Jaffna.

Applicants should havo previous expereince and knowledge of the posts they are applying for and should have a reasonable knowledge of spoken and written English. Previous appplicants for these posts should not re-apply.

Vacancies exist for three positions:-

**TECHNICAL OFFICER / STORE KEEPER**
**DOMESTIC / OFFICE AIDE**
**SECURITY OFFICER (WATCHER)**

(40385)

## அருண் கல்வி நிலையம்

நுணாவில் சாவகச்சேரி

**A/L 96, 97**
வகுப்புகள்

ஆரம்பம்:- **03 - 04 - 96** புதன் மாலை 3 மணி

வழமையான ஆசிரியர் குழு

(41116)

வலிகாமத்தில் தனித்துவமாக இயங்கி வந்த
## BITSMANS கல்வி நிறுவனம்

நெல்லியடியில்:-
**சயன்ஸ் அக்கடமி கல்வி நிறுவனத்திலும்**

பருத்தித்துறையில்:-
**N. C. A. கல்வி நிறுவனத்திலும்**
(ரஞ்சன் பூங்கா முன்பாக)

எமது வழமையான ஆசிரியர் குழுவினால் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

ஆண்டு **5** முதல் **11** வரை
**A/L** கலை, வர்த்தகம்

★ விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்
ராஜ்கோபால்

★ கணிதம்
இரா. அருட்செல்வம்
சிறிக்குமார்

★ தமிழ்
என். பாலா
குழந்தைவேல், தர்மா

★ ஆங்கிலம்
M. A. ஹரி
தெய்வர், கிருபாகரன்

★ சமூகக்கல்வியும் - வரலாறும்
ராஜ்குமார், கணேஷ்

★ இந்துசமயம்
தர்மா

ஆரம்பம் **3-4-96** புதன் மாலை **3.00**

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
M. A. ஹரி B. A. Dip Eng

ஆரம்பம் **3 - 4 - 96** புதன் மாலை **4.00**
★ விண்ணப்பங்கள் **30-3-96** இல் இருந்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

[40384]

ஓம்சாயிராம்
## குடியிருப்பு திட்டம் - எழுதுமட்டுவாள் இடம் பெயர்ந்தவர்களுக்கு மட்டும்

குடியிருப்பு வீடு அமைப்பதற்கு ஆதனமும் 3 பரப்பு விளை நிலமும் 3 வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்படும். மற்றும் பாசன வசதியும், குடிதண்ணீர் வசதியும், வீட்டுக்கோர் மலசல கூட வசதியும் உண்டு. வீடு அமைக்க மரமும் வழங்கப்படும். குத்தகை இல்லை. வாடகை இல்லை. சிறு முற்பணம் தேவை. முன்னுரிமைப்படி ஆதனம் வழங்கப்படும்.
தொடர்பு:
சி. சிவஞானம்
மே/பா. காசி. செ. முத்துக்குமாரு
(சத்திய ஆணையாளர், பிரசித்த நொத்தாரிஸ்)
''புவன மகால்'', 195 சோதி அம்மன் வீதி,
(விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் முன்புறம்)
(41113) மீசாலை மேற்கு, மீசாலை.

## யாழ். கல்வி நிறுவனம்
### JAFFNA TUITION CENTRE

[சாவகச்சேரிக்கும் நுணாவில் சந்திக்குமிடையில் கமலநாதன் வீதிக்கருகாமையில்]

**O/L, ஆண்டு 10, 9**
ஆரம்பம்: **03 — 04 — 96**

**A/L, 96, 97**
இந்து நாகரிகம் / இந்து சமயம் ) கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

ஆரம்பம்: **03 — 04 — 96** பி. ப. **3** மணி
★ விக்னா கல்வி நிறுவன ஆசியர்களின் ஒருங்கிணைந்த சேவை
★ ஏனைய பாடங்களுக்கான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.
★ 28-3-96 தொடக்கம் அனுமதிகள் வழங்கப்படும்.

(41235)

மருத்துவத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினை நடத்த ''லைசென்ஸ்''
## 'தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவு'
வழங்கும்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மருத்துவத்துடன் தொடர்புடைய நிலையங்கள், நிறுவனங்கள் எதனையும் உரிமங்கள் (லைசென்ஸ்) இல்லாமல் மே 01 திகதிக்குப்பின்னர் தனியார் நடத்த முடியாது.

கிளிநொச்சி, முல்லை ஆகிய மாவட்டங்களில் மருத்துவத்துடன் தொடர்புடைய பின்வரும் நிலையங்களை இவ்வாண்டு நடத்துவதற்கு உரிமம் கோரும் விண்ணப்பங்கள் கிளிநொச்சியில் மருத்துவப்பிரிவு நடுவப்பணியகத்திலும் புதுக்குடியிருப்பு மாவட்ட வைத்தியசாலையில் அமைந்துள்ள நோயாளர் நலன் புரிச்சங்க அலுவலகத்திலும் 27 - 03 - 1996 முதல் 15 - 04 - 1996 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

★ சுதேச, ஆங்கில, ஹோமியோபதி, அக்குபஞ்சர் சிகிச்சை நிலையங்கள்.
★ சுதேச, ஆங்கில, மருத்துவமனைகள், ஆலோசனை நிலையங்கள்.
★ சுதேச, ஆங்கில மருந்து விற்பனை நிலையங்கள்.
★ மருந்து உற்பத்தி நிலையங்கள்.

மேற்குறிப்பிட்ட நிலையங்கள் எதனையும் தனியார் நிறுவன உரிமையாளர்கள் எவரும் உரிமங்கள் இன்றி 01 - 05 - 1996 இற்குப்பின்னர் நடத்துதல் ஆகாது.

உரிமத்துக்கான விண்ணப்பங்களை கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள மருத்துவப் பிரிவு கிளை நடுவப்பணியகத்திலும் புதுக்குடியிருப்பு மாவட்ட வைத்தியசாலையில் அமைந்துள்ள நோயாளர் நலன் புரிச்சங்க அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் ரூபா ஐந்து செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய உரிமக்கட்டணத்தை செலுத்தி மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் 15 - 04 - 1996 இற்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும். அத்துடன் குடும்பப்பதிவு அட்டை, பதிவுச்சான்றிதழின், பட்டமளிப்புச் சான்றிதழின் நிழற்படப்பிரதி ஆகியவற்றை ஆய்வாளரின் ஆய்வுக்காக கொண்டு வரவேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

பொறுப்பாளர்,
மருத்துவப் பிரிவு,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
வன்னிப்பிராந்தியம்.

(சி-4145)

## யாழ். றோட்டறிக் கழகமும் ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமமும்
இணைந்து நடத்தும்
## இலவச கண் சிகிச்சை முகாம் - II

திகதி: **03 — 04 — 1996** புதன்கிழமை காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

இடம்: பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்.

★ வடமராட்சி கிழக்கில் உள்ள 100 பேருக்கு முன்னுரிமையும் போக்குவரத்து வசதியும் செய்து கொடுக்கப்படும்.

**28 — 03 — 96**
**01 — 04 — 96** ] செம்பியன்பற்று அரசினர் பாடசாலையில் காட் வழங்கப்படும்

முக்கிய குறிப்பு:
இதுவரை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ரூபா 25,000 பெறுமதியான திறமான மூக்குக் கண்ணாடிகளை வழங்கியுள்ளது.

செயலாளர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை. 27-4-96. (சி-4146)

## 100-ம் நாள் நினைவஞ்சலி
### இராசதுரை பிரபாகரன்
(நூலக ஊழியர், யாழ் பல்கலைக்கழகம்)

மறைவு: **19 — 12 — 1995**

நூலக சேவையிலே உன் உழைப்பால் உயர்ந்து பல்கலைக்கழக சேவையினை பல வருடம் பணிபுரிந்து மறைந்தும் மறையாது எம் மனங்களில் நிறைந்து பசுமை நினைவுகளை நெஞ்சத்தே விரித்த எம்மவனே இறைஞ்சுகின்றோம் உமது ஆத்ம சாந்திக்காக

நூலக அலுவலர் கழகம்
யாழ். பல்கலைக்கழகம்

(41232)

## கண்ணீர் அஞ்சலிகள்

யா/ மல்லாகம் மகாவித்தியாலயத்தின் முன்னாள் பிரதி அதிபர்

திருமதி
### சரஸ்வதி இராஜேந்திரா

அவர்கள் 25-03-96 இல் காலமானார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
மல்லாகம் மகாவித்தியாலயம்

[41236]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தடை, ஒரு சதி!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இயங்குவதற்கு மறைமுகமான தடை விதிக்கும் வகையில், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சில முடிவுகளை மேற்கொண்டுள்ளது.

இப்பல்கலைக்கழகம் வேண்டுமானால், இராணுவம் ஆக்கிரமித்துள்ள வலிகாமத்திலோ அல்லது ஏனைய இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்ட பகுதியிலோ மட்டுமே இயங்கலாம்; ஆக்கிரமிக்கப்படாத பகுதிகளில் இயங்கக்கூடாது.

இதுவரை பயின்ற மாணவர்களுக்குரிய பரீட்சைகளைக்கூட ஆக்கிரமிக்கப்படாத பகுதிகளில் நடத்தக்கூடாது; அவற்றைக் கொழும்பிலோ அல்லது ஆக்கிரமிக்கப்பட்ட வலிகாமம் உட்பட வேறு பகுதியிலோ மட்டுமே நடத்த வேண்டும்.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் மீது மானிய ஆணைக்குழு திணித்துள்ள பாதகமான முடிவுகள் இவை.

இந்தத் திணிப்பு வடக்குத் தமிழ் மாணவர்களின் உயர் கல்வியைப் பாழடிக்கும் சதித்திட்டமாகும். இப்போது யாழ். பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருக்கும் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் உயர் கல்வி இதனால் சீரழிந்து போகும் ஆபத்து உண்டு.

அது மட்டுமன்றி, தமிழ் மண்ணை ஆக்கிரமிப்பதற்காக அரசாங்கம் நடத்தும் போர் முடியும் வரை, வளரும் சந்ததி மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பை முற்றாக அடைத்துவிடும் பயங்கரச் குழிபறிப்புமாகும்.

இராணுவத்தின் விமானத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் நாசகாரங்கள், பேரழிப்புகளின் மத்தியிலும் யாழ். பல்கலைக்கழகம் தனது கல்விப் பணியைத் தொடர்ந்து வந்தது. இது கண்டு தென்னிலங்கைக் கல்விமான்கள், அரசியல்வாதிகள் பாராட்டியதும் உண்டு; பாராட்டுவதுபோலப் பொறாமைப்பட்டதுமுண்டு.

அந்தப் பொறாமையின் ஒரு வடிவமாகவே அதனை இப்போது இயங்கச் செய்யாமல் தடுப்பதற்கு சூழ்ச்சி செய்யப்படுகிறது.

தமிழர்கள் கல்வியைப் பெரும் சொத்தாகக் கருதுவதால், பல்கலைக்கழகத்தை வலிகாமத்தில் இயங்குவதற்கு நிர்ப்பந்திப்பதன் மூலம், மக்களை அங்கு திரும்பச் செய்யலாம் என்பதும் அரசின் நோக்கமாக இருக்கலாம்.

யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவையும், மூதவையும் மேற்கொண்ட தீர்மானங்களுக்கு எதிராக, அவற்றை மீறும் விதத்தில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தனது முடிவுகளை எடுத்திருக்கிறது. இதன் மூலம் யாழ். பல்கலைக்கழகத்தின் சுயஅதிகாரம் உடைக்கப்பட்டு, கொழும்பின் ஆதிக்கம் நிலைநாட்டப்படுகிறது!

ஏற்கனவே அதன் பிரிவுகள் இயங்கும் கைதடியிலும், கிளிநொச்சியிலும் அதனைமாணவர் நலன் கருதி இயக்கினால் அதில் என்ன தவறு?

இதற்குத் தடை விதிப்பது தமிழ் மாணவர் உயர் கல்வியை நிர்மூலமாக்கும் நச்சுத்தனமான நடவடிக்கை ஆகும்: பல்கலைக்கழகப் பேரவையும், மூதவையும் தமது பக்க நீதியை எடுத்துச் சொல்லி இந்தச் சதிக்கு, அநியாயத்துக்கு, கொடுமைக்கு எதிராக ஒரே அணியில் போராடவேண்டும்.

# யாழ். பல்கலை. குறித்து முக்கிய முடிவு எடுக்கப்படும்

## கொழும்பு அறிவிப்பால் குழப்பம்

சாவகச்சேரி, மார்ச் 27

யாழ். பல்கலைக்கழகத்தின் எதிர்காலம் குறித்து இவ்வாரம் நடக்கும் மூதவை, பேரவை கூட்டங்களில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகளை நிறுத்துமாறு யாழ். பல்கலைக்கழகத்துக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பல்கலைக்கழகத்தின் பீடங்களின் சபைகளும், மூதவை, பேரவை ஆகியனவும் இவ்வாரத்தில் கூடுகின்றன.

கலைப்பீடத்தின் சபை இன்று காலை 10 மணிக்கும்—

மருத்துவ பீடத்தின் சபை நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கும்—

மூதவை நாளை பிற்பகல் 1.30 மணிக்கும்—

பேரவை நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கும்— கைதடியில் கூடவிருக்கின்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல்தீர்வு காண்பதை கைவிடும் போக்கில் அரசு

## ஸ்ரீலங்காவில் பொஸ்னியா உருவாகுமாம்

கொழும்பு, மார்ச் 26

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதனை கை கழுவி விடும் போக்கை ஜனாதிபதி சந்திரிகா கடைப்பிடிப்பதாக கொழும்பில் அரசியல் விமர்சகர் ஒருவர் சாடியுள்ளார்.

சிங்கள பௌத்த உணர்வு இப்போது தெற்கில் மீண்டும் கிளர்ந்து எழுந்துள்ளது. அதனால் சந்திரிகா தமிழர்களை அந்நியப்படுத்தும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்—

இது இங்குள்ள மிதவாதத் தமிழர்களையும், வெளிநாடுகளில் உள்ள தமிழர்களையும் தனிநாடு ஒன்றை உருவாக்க வேண்டும்; 'மக்கள் உயிரிழப்பு, ஊனமுறுதல் என்ற பெருவிலையைக் கொடுத்தேனும், நீண்டகாலத்துக்குப் போராடியேனும் தனிநாட்டை உருவாக்கவேண்டும் என்ற கருத்தில் ஒன்றுபடத் தூண்டும்— என்றும் ''வீக்கென்ட் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகையில் வில்பிரெட் லாஸ் என்பவர் எழுதியுள்ள அரசியல் விமர்சனக் கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ அண்மையில் சந்திரிகா இந்தியப் பத்திரிகையாளர் சித்தார்த் பாத்தியாவுக்கு வழங்கிய தொலைக்காட்சிப் பேட்டியில், எல்லாத் தமிழர்கள் மீதும் மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.

இந்தக் கட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு தமிழர்களை புறக்கணித்தால், நாட்டில் தொடர்ந்து இரத்த ஆறு ஓடும். ஸ்ரீலங்காவில் இன்னொரு பொஸ்னியா உருவாகும்.

★ அரசின் அதிகாரப் பரவல் திட்டத்துடன் தமிழர் பிரச்சினையைச் சம்பந்தப்படுத்தியிருக்கக்கூடாது.

தெற்கில் நிர்வாகத்தைப் பரவல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

ஆனால் வடக்கு - கிழக்குப் பிரச்சினையை [illegible]வில் தனியாகச் சந்திரிகா அணுகியிருக்கவேண்டும்.

★ தங்களது பிரதேசத்தில் கூடுதல் தன்னாட்சி உரிமை கிடைக்கும் என்ற தமிழர்களது நம்பிக்கை, சமஷ்டி அரசு, நம்பிக்கை சரிந்து போகிறது.

★ தமிழர்கள் தமது சுயகௌரவத்தைப் பேணுவதற்கு ஒரே வழி பிரிந்து போவதே என்ற விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் கோட்பாடு இதனால் உத்வேகம் அடைந்து வருகிறது. (அ)

# நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

(நேற்றைய தொடர்ச்சி)

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள, தமிழீழ வைப்பகத்திற்கு இன்று 27ஆம் திகதி காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ கனகரத்தினம் நகுலேஸ்வரன் அல்லது சிவயோகம் கனகரத்தினம் — இல 86, 1 புங்கன்குளம் வீதி, அரியாலை.

★ பிரம்மஸ்ரீ கணேசலிங்கக்குருக்கள் (சிவகடாட்சக் குருக்கள் மகன்) — காசிவிநாயகர்கோவில், தெல்லிப்பளை கிழக்கு.

★ பஞ்சாட்சரதேவி ஞானசேகரவேல் அல்லது இராமநாதன் சீனிவாசகம் தேவராஜா — ஞானபாஸ்கரோதயா வீதி, கல்வியன்காடு.

★ ஞானமலர் அல்பிரட் — இல 80, ஈச்சமோட்டை வீதி, சுண்டிக்குளி-

★ அனுசியா பழனிச்சாமி — இல 99, 251 கச்சேரி வீதி, நல்லூர்

★ நாகேஸ்வரி செல்வரெட்ணம் —கோட்டைக்காடு, ஏழாலை மேற்கு.

★ இரத்தினம் வாசுதேவன்/ (குசேலு) — சிலம்புப் புளியடி, சங்கானை.

★ கிறிஸ்சாந்து யேசுதாசன் — இல 20/2, சென் ஜேம்ஸ் மேற்கு வீதி, குருநகர்.

★ மெற்றாலின் அகஸ்ரின் — இல 8/4, மத்திய கிழக்கு வீதி, குருநகர்.

★ றோசமலர் சதாசிவம் — தம்பாலை, அச்சுவேலி.

★ வரப்பிரகாசம் பேதுறுப்பிள்ளை — சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.

★ முத்தையா அருளையா — 'முருகநாமம்', சிறைவாசன் வீதி, மல்லாகம்.

★ J. S. பேனர்ன்டோ — இல. 35, ஓடக்கரை றோட், யாழ்ப்பாணம்.

★ அஞ்சலோ மைக்கல் — இல. 13, சின்னக்கடை றோட், யாழ்ப்பாணம்.

★ லீலாவதி சிவராசா — கட்டுவன் தெற்கு.

★ கமலராணி சுப்பிரமணியம் அல்லது சித்திரா சுப்பிரமணியம் — இல. 203, கண்டிவீதி, அரியாலை.

★ கிறேசியன் டெபி — இல. 48, 2ஆம் குறுக்குத் தெரு, பாஷையூர்.

★ சுபத்திராதேவி இராசரத்தினம் அல்லது சகுந்தலாதேவி நாகராசா — இல. 19, நாவலடி லேன், வண்ணார்பண்ணை.

★ கனகசபாபதி விவேகானந்தராஜா அல்லது வரதவாணி விவேகானந்தராஜா — இல. 36, பண்டாரக்குளம் வீதி, நல்லூர்.

★ சதாசிவம் மனோகரன் — அச்செழு, நீர்வேலி.

★ சீனிவாசகம்பிள்ளை நல்லையா அல்லது வேலுப்பிள்ளை — வித்தியாலய வளவு, பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு.

★ ஆறுமுகம் கிருஸ்ணவேலாயுதம்—ஒடுவங்கலட்டி, இடைக்காடு, அச்சுவேலி.

★ சரஸ்வதி சின்னராசா — அரசடி, கொக்குவில் மேற்கு.

★ முத்தையா ராஜேந்திரம் — தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு.

★ இரத்தினராசசிங்கம் கிருஷ்ணவேணி அல்லது இலக்குமி சீவியர் — ''நந்தா வில்லா'', கந்தரோடை வீதி, சுன்னாகம்.

★ நல்லதம்பி இரத்தினம் பரமேஸ்வரி — இல 50, நாவலடி வீதி, வண்ணார்பண்ணை.

★ சிவஞானம் சிவதாசன் — தாவடி தெற்கு.

★ சின்னத்தம்பி கந்தசாமி — இல 14, 1ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

★ கனகசபை கிருஸ்ணகுமார் — இல 189, சென் பெனடிக்ற் றோட், அரியாலை மேற்கு.

★ ராசமணி சண்முகராசா — சுதுமலை தெற்கு.

★ சத்தியபாமா கனகசபை — இல 189, சென் பெனடிக்ற் றோட், அரியாலை மேற்கு.

★ கே. மகாதேவா — இல 27/35, சாயிபாவு ஒழுங்கை, புங்கன்குளம் றோட், கொழும்புத்துறை.

★ அனிற்றா ஜக்குலின் எட்வேட் — இல 215/16, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம்.

★ இராசா வேலாயுதம்பிள்ளை — [illegible] ஒழுங்கை, இணுவில்.

★ வேலுப்பிள்ளை காராளசிங்கம் — நாகந்தோட்டம், பத்தைமேனி.

★ மலர் புஸ்பராஜன் — அராலி வடக்கு.

★ கார்த்திகேசு தங்கராசா — ஜனசக்தி வீதி, சிறுப்பிட்டி மேற்கு.

★ மதன் சண்முகசுந்தரம் — ஜனசக்தி வீதி, சிறுப்பிட்டி மேற்கு.

★ தவமணிதேவி செல்வராசா — M. S. வீதி, கோண்டாவில் கிழக்கு.

★ மகேஸ்வரி இராசையா — அராலி வடக்கு.

★ பிள்ளையார் செல்வர் — விக்கினேஸ்வரா வீதி, சங்கானை.

★ கனகராசா சுப்பிரமணியம் — ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு,

★ குட்டி மனுவல் — இல 7/1, மத்திய கிழக்கு வீதி, குருநகர்.

★ பரமேஸ்வரி நடராசா — பார்வதி வாசகம், சுழிபுரம் மேற்கு.

★ புளோறன்ஸ் அன்ரனிப்பிள்ளை — இல 2, 6 புதிய வீடமைப்புத் திட்டம், குருநகர்.

★ முத்தையா சுவேந்திரராஜன்—ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு.

★ மாலதிதேவி விவேகானந்தன் - கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு.

★ கந்தையா மகாதேவன் — சுதுமலை வடக்கு.

★ சின்னவன் குட்டியன் — அச்சுவேலி வடக்கு.

★ ஜோசப்பு ஜோசப்பின் (ராதா) — இல 13/5, மத்தியூஸ் றோட், யாழ்ப்பாணம்.

★ கந்தையா குலசிங்கம் — இலங்கைநாயகி அம்மன் கோவிலடி, கல்வியன்காடு.

★ குணசிங்கம் வரதராஜன் — இல 44/2, மணல்தறை லேன், கந்தர்மடம்.

★ சவரிமுத்து குணரட்ணம் அல்லது தங்கமணி குணரட்ணம் — இல 113, செம்மணி வீதி. நல்லூர்.

★ பத்மினி தட்சணாமூர்த்தி அல்லது தட்சணாமூர்த்தி — உரும்பிராய் வடக்கு.

★ கலையரசி சின்னத்தம்பி— சத்திரங்கை, இடைக்காடு.

★ சபாபதிப்பிள்ளை முருகையா— பத்தானை வீதி, தொல்புரம்.

★ கணபதிப்பிள்ளை மார்க்கண்டு — இல. 22/3, 3ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை கிழக்கு.

★ தம்பிஐயா சண்முகலிங்கம் — இல. 199, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

★ கௌரி சண்முகநாதன்—யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

★ முத்துக்குமாரு தர்மலிங்கம் — இல. 5, குறோசெற் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ குணபூரணி சதானந்தம் — இல. 6/2, புறாடிமுன் ஒழுங்கை, அரியாலை மேற்கு.

★ நாகம்மா பொன்னுத்துரை — இல. 22, 4ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை கிழக்கு.

★ செல்வராசா நாகரட்ணம் — இல. 22, 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை கிழக்கு.

★ மகேஸ்வரி கந்தையா — அருளானந்தப்பிள்ளையார் கோவிலடி, கந்தரோடை.

★ தவேந்திராதேவி புண்ணியலிங்கம் — ''புண்ணிய வாசா'' இளவாலை.

★ இந்துமதி இரத்தினசிங்கம்—இசைஞானி, வாணி, இல 237, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

★ பொன்னையா பரமேஸ்வரன் அல்லது பரமேஸ்வரன் அபிராமி — தாவடி வடக்கு.

★ துரையப்பா பரராஜசிங்கம் — உரும்பிராய் வடக்கு.

★ கனகசபை தியாகலிங்கம் — ஐயனார் வீதி, சுன்னாகம் மேற்கு.

★ பகவதி சிவஞானசுந்தரம் — சொர்ண வடலி ஒழுங்கை, கொக்குவில்.

★ நடராசா காளிதாசன் — Snell house, மானிப்பாய் வீதி, உடுவில்.

★ அருணாசலம் விக்னேஸ்வரமூர்த்தி — கட்டுவன் தெற்கு.

★ ஏ. செல்வரத்தினம் — இல- 50/1, அராலி வீதி, ஒட்டுமடம்.

★ பொன்னையா குருசாமி — கோண்டாவில் வடக்கு.

★ சின்னத்தம்பி தம்பித்துரை — இல. 40/1, கலைமகள் வீதி, அரியாலை.

★ எஸ். மார்சல் (மறியன் சொலமன் அல்பேட்)— இல [illegible] மவுன்ட்காமல் றோட், யாழ்ப்பாணம்.

(முற்றும்) (இ)

# ஜி. சீ. ஈ. மாணவர் விவரம் சேகரிப்பு

சாவகச்சேரி, மார்ச் 27

1995 ஆம் ஆண்டுக்குரிய ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையை விரைவில் நடத்துவதற்கு வசதியாக மாணவர் புள்ளி விவரங்கள் திரட்டப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன.

எனவே இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்த வலிகாமம் பகுதிப் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் விவரங்களை கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் இன்று தவறாது கையளிக்குமாறு பாடசாலை அதிபர்கள் அனைவரையும் வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கேட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## துரையப்பா புவனேந்திரன்

அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற புகையிரத அதிபர் துரையப்பா புவனேஸ்வரி தம்பதிகளின் மகன் புவனேந்திரன் (கொல்வின்) மாக்கற் யாழ்ப்பாணம் 15 - 03 - 96 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

இத்தகவலை உற்றார், உறவினரும், ஏனையோரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி து. சவுந்தலா
(சகோதரி)

மாவடிப் பிள்ளையார் கோவிலடி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(41112)

## முருகேசு பாலசிங்கம்

(காரைநகர்)

காரைநகர் சந்தம்புளியடியைச் சேர்ந்தவரும், யாழ். கந்தர்மடத்தில் வசித்தவரும், தற்பொழுது சரசாலை மத்தியில் வசித்து வந்தவருமான முருகேசு-பாலசிங்கம் 1996-03-25 திங்கட்கிழமை காலமானார்.

இவர் யோகமலரின் அன்புக் கணவரும், எம். பி. அருளானந்தன் (ஆசிரியர், யா / கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், காரைநகர்), நிர்பானந்தன், கிருபானந்தன், (ஜேர்மனி), மணிமேகலை, ராதிகா, கிருசாந்தினி, றயனி, யசோதா அவர்களின் பாசமிகு தந்தையும், தனபாலசிங்கம் அவர்களின் மாமனாரும், துரியாதரனின் அன்புப் பேரனும், குணநாயகம், இரத்தினசபாபதி, அம்பிகாபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சீனியர்—பாக்கியத்தின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் நிறைவுக் கிரியைகள் இன்று 1996. 03. 27 புதன்கிழமை காலை 10. 00 மணிக்கு சி. இராசையா, சரசாலை மத்தி என்னுமிடத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எம். பி. அருளானந்தன்
(மகன்)
காரைநகர்

தற்போதைய முகவரி
சி. இராசையா ஆசிரியர்,
சரசாலை மத்தி,
சரசாலை.
(உதயன் பத்திரிகை நிறுவனத்தின் முன்பாக செல்லும் திலிபன் வீதியில் அமைந்துள்ளது.)

(41230)

## திருமதி மாணிக்கம் சின்னம்மா

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலில் வசித்தவரும், தற்போது 13, கட்சன் வீதி, வட்டக்கச்சியில் வசித்து வந்தவருமாகிய திருமதி மாணிக்கம் சின்னம்மா 24 – 03 - 96 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மாணிக்கம் அவர்களின் அன்பு மனைவியாரும், நீலாம்பிகை, குலமணி (கொழும்பு), சுப்பிரமணியம் (நயினாதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், வே. சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மாமியாரும், எஸ். பி. எஸ். விவேகானந்தன், வசந்தி (கனடா), வசந்தன் (லண்டன்), வரதன் (லண்டன்), வளவன் (லண்டன்), வரோதயம் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிந்துஷா (கனடா), சரண்யா (கனடா), மருஷா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பூட்டியும், திரு. கந்தையா, திருமதி நாகேசு சின்னத்தங்கச்சி ஆகியோரின் சகோதரியும், திருமதி சுப்பையா பரமேஸ்வரியின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25 – 3 – 96 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு 13, கட்சன் வீதி, வட்டக்கச்சியில் நடைபெற்று பூதவுடல் மம்மில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. சுப்பிரமணியம்
(மருமகன்)

13, கட்சன் வீதி,
வட்டக்கச்சி.

(40486)

## பூதப்பிள்ளை இளையதம்பி

ஆதி மயிலிட்டியில் பிறந்தவரும், புன்னாலைக் கட்டுவனில் திருமணம் செய்தவரும், இடம்பெயர்ந்து மீசாலையில் வாழ்ந்து வந்தவருமான பூதப்பிள்ளை இளையதம்பி (Proctor and Notary Public) கொழும்பில் 20 - 03 – 1996 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 81A, Kynsey Road, Colombo 08 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்க;

பேராசிரியர் சு. சுசீந்திரராசா
(மருமகன்)

(41234)

# அரச படைகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நவாலியில் 150 அப்பாவிக் குடிமக்கள் நாகர்கோவிலில் 29 பள்ளிச் சிறார்கள், குமாரபுரத்தில் 30 அப்பாவிக் குடிமக்கள் என்பதான படுகொலைப்பட்டியல், அண்மைக்காலப்பகுதிக்குள் நடந்த படுகொலைத் தொடரில், உதாரணமாகக் கொள்ளக் கூடிய மிகக்குறைந்த அளவீடெனலாம்.

இப்படுகொலைகள் எவற்றுக்கேனும் எவ்வித நஷ்டஈடும் கொடுபட வில்லை என்பதுடன் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுமில்லை; மரணச் சடங்குச் செலவுகள் கொடுபடவுமில்லை. வருத்தம் தெரிவிக்கப்பட்டதோவென்றால், அது கூடச் செய்யப்படவில்லை. ஏதோ ஒருவிதத்தில் இந்த அப்பாவிக் குடிமக்களின் இறப் எண்ணிக்கை, புலிகள் இறப்பு எண்ணிக்கையாகக் ''கணக்கிடப்பட்டது.''

இப்படியிருந்தும்கூட, மாட்சிமைதங்கியதங்களை, இனப்பிரச்சினைக்கு ஓர் சமாதானத் தீர்வுகாண விழைவதாகப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் ஓர் அரசின் முதல்வராக, புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுவிக்க அனுப்பப்பட்ட ஆயுதப்படைகளின் பிரதம தளபதியாக ஏற்றுக்கொண்டு, இச்சம்பவத்தில் மிகத் துலாம்பரமாகத் தெரியும் சில விஷயங்கள் பற்றி ஓர்பொருத்தப்பாடான கேள்வியை உங்கள் முன்வைப்பது, இன்னும் கூட எனது கடமையெனக் கருதுகின்றேன்.

### கோழைத்தனம்

மன்னார், பள்ளிமுனைக் கடற்பரப்பில் 15 - 03 - 1996 வெள்ளியன்று ஸ்ரீலங்கா கடற்படையினருக்கும் சில கடற்புலிகளுக்குமிடையே ஓர் மோதல் ஏற்பட்டதென்றும் புலிகளைத் துரத்திச் செல்லும் வேளையில் கடற்படைக் கலம் கடற்கண்ணி வெடியிற் சிக்கியதால் கடற்படையினர் எட்டுப்பேர் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டது. கடற்படையினர் புலிகளைத் துரத்தி, தங்கள் முழுப்பலத்துடனும் தாக்கியிருந்தால், புத்தித்தெளிவுள்ள எவருமே அதைப் பிழையென்று சொல்லமாட்டார். ஆனால், படையினர் செய்ததென்ன? சம்பவம் நடந்த சில மணி நேரத்தின் பின் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த ஓர் அகதிக் கிராமத்தின் மீது ஏறிகணைகள் வீசிய மிக மோசமானதும்கோழைத்தனமானதுமானசெயல்தான்!

துப்பாக்கிசூட்டுபரிமாற்றத்தின் மத்தியில் குடிமக்கள் அகப்பட்டு, கொல்லப்படுவதை எங்களால் விளங்கிக் கொள்ள முடியும்; ஆனால் நாச்சிக்குடாவில் நடந்ததை விளங்கிக்கொள்ள முடியவில்லை.

தமிழ்கட்சிகள் நாச்சிக்குடா சம்பவம் பற்றி விசாரிக்க ஓர் ஆணைக்குழு அமைக்கும்படி கேட்கக்கூடும் (நஷ்டஈடுவழங்கும்படி கேட்க அவர்கள் துணிய மாட்டார்கள்); ஆணைக் குழுக்கள் மட்டும் அமைப்பதாலேயேபிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் காட்டிக் கொள்ளும் அரசும் உடனடியாக 'ஒருநபர்' ஆணைக்குழுவொன்றை நியமிக்க இணங்கக்கூடும்; முடியுமானவரை ஒரு படையணி அதிகாரியையே கொண்ட ஒரு நபர் ஆணைக்குழுவை நியமித்துவிட்டு, ''தீர்த்துக்கட்டும் தீர்வு ''என்ற ரீதியில் பெருமளவு தமிழரைக் கொலை செய்யும் நிலைப்பாட்டைத் தொடரலாம்.

### விசாரணை ஆணைக்குழு கேட்கவில்லை

ஆனால் கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சியாளர் கேட்பது போல ஆணைக்குழு நியமிக்கும்படி நாங்கள் கேட்கவில்லை; மாறாகஇழ்க்காணும் கேள்விகளுக்கு உங்களிடமிருந்து மனதில் நம்பகத்தன்மை ஏற்படுத்தக்கூடிய பதில் எதிர்பார்க்கிறோம்.

★ பல வருடங்களுக்கு முன்பிருந்தே ஜனநாயக ரீதியாகத் தெரிவிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்ப்புணர்வுகளை அரசாங்கங்கள் அடக்கியதன் விளைவாகத் தோன்றிய வன்முறைச் சுற்றிற்கு, உங்கள் அரசு எப்படி முடிவு காணப்போகிறது?

★ அரச படைகளின் கோழைத்தனமான பழிவாங்கல் நடவடிக்கைகளும் கூட உங்கள் சமாதானத் தீர்வு முயற்சியின் ஒரு பகுதிதானென எப்படி நீங்கள் நியாயப்படுத்துகிறீர்கள்? —என்று வினா எழுப்பியுள்ளார்.

(அ)

## யாழ். பல்கலை..

(3 ஆம் பக்கத் தொடர்)

பல்கலைக்கழகத்தின் சகல கூட்டங்களும் இனிமேல் கைதடியில் உள்ள சித்த மருத்துவத்துறை அலுவலகத்திலேயே நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-7-154)


## விற்பனைக்கு

ஒருகை பாவனையிலுள்ள மிகவும் நல்ல நிலையில் உள்ள Trumph- 5. 5 Tiger 100. மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
சி. கணேஷராஜன் (கணேஷ்)
(மிருசுவில் சேர்ச்க்கு முன்பாக உள்ள பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்னாள்)
மிருசுவில் சந்தி
மிருசுவில்

(41238)

## விஞ்ஞான கல்வி நிலையம்

மடத்தடி, சங்கத்தானை, சாவகச்சேரி.

அ. யோகானந்தாவின்
பிரத்தியேக பௌதீக வகுப்புகள்

ஆரம்பம் **02-04-1996** செவ்வாய்

| | | |
|---|---|---|
| 1995 : | மீட்டல்: | புதன், வெள்ளி, ஞாயிறு; 3 - 5 |
| 1996 : | | செவ்வாய், வியாழன், சனி : 3 - 5 |
| 1997 : | | செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி: 5 - 6 |

(41096) நிர்வாகி.

## HARY'S INSTITUTE

(KONDAVIL)
SYAMALA MILL LANE, MEESALAI.
(புத்தூர் சந்திக்கு அருகில்)

Lectures By:
**MR. M. A. HARI** (B. A. Dip-in-Eng.)

★ புதிய பிரிவு II ஆரம்பம்

SPOKEN ENGLISH WITH GRAMMAR

**05 - 04 - 1996** பிற்பகல் 5 p. m. — 6 p. m.

★ பல்கலைக்கழக அனுமதி பெற்றுச் செல்லும் மாணவர்களுக்கான விசேட பிரிவு **06 - 04 - 1996** பிற்பகல் 1-00pm — 2-30 ஆரம்பமாகவுள்ளது.

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(41231) — DIRECTOR.

## பிறில்லியன்ற்
### கல்வி நிலையம்
## BRILLIANT INSTITUTE

சங்கத்தானை
[சாவகச்சேரி இந்துக் கல்லூரி பின் ஒழுங்கை]

தென்மராட்சி, யாழ், முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

**ஆண்டு 5 - O/L வரை**

ஆரம்பம்:- **03-04-96** பி. ப. 3 மணி

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை அனுமதிகளை **01-04-96** ற்கு முன் பெற்றுக் கொள்ளவும்.

அலுவலக நேரம் பி.ப 4 - 6

(41118) நிர்வாகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி பூபாலசிங்கம்

(இளைப்பாறிய M. L. T.)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், 'சிவகிரி' நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பூபாலசிங்கம் 26-03-96 காலை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், இரத்தினாவதியின் [கொட்டடி] அன்புக் கணவரும், விமால் (லண்டன்) அவர்களின் அன்புத் தந்தையும், மைதிலியின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சீனிவாசகம் சரஸ்வதி [மலேசியா], காலஞ்சென்ற கனகசபாபதி, கதிரவேலு புவனேஸ்வரி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சீனிவாசகம் [மலேசியா], கதிரவேலு, மகேஸ்வரி, ஞானேஸ்வரி, சிவச்சந்திரன், சாரதாதேவி, ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-03-96 மாலை 4-00 மணியளவில் சாவகச்சேரி இந்து மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ஆ. கதிரவேலு
C/o. வ. தனபாலசிங்கம்
(கற்குழி முருகன் கோயில் அருகில்)
''சிவகிரி'',
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

ஆ. கதிரவேலு
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

[41115]

## பொன்னையா பத்மநாதன்

நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோவிலடியைச் சேர்ந்த பொன்னையா — பத்மநாதன் 26-03-1996 காலை காலமானார். அன்னார் ஆனைக்கோட்டை பொன்னையா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், உரும்பிராய் முத்துவேலு தம்பதியரின் மருமகனும், தவமலரின் அன்புக் கணவரும், கோபி [சுவிஸ்], ஜெயா [சுவிஸ்], விஜிதா [சுவிஸ்], ரமணன் [சுவிஸ்], முரளி [சுவிஸ்], ராம் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், குணா, ரஜனி, அருணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கீர்த்திகா, ஜெசிந்தன், ஜெனீபன், ஏஞ்சன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-03-1996 அன்று இவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று, மிருசுவில் ஈச்சங்காடு மயானத்தில் தகனக்கிரியை நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்;
Dr. இரா. சுப்பிரமணியம்
(நீர்வேலி)

சதீஸ் வீதி,
கந்தசாமி கோவிலடி,
உசன், மிருசுவில்.

[41119]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 27-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.